**மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினதும் (''பணியகம்'') பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (''குழுமம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகள் உள்ளடங்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பணியகத்தினதும் குழுமத்தினதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் மற்றும் குழுமம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகம் மற்றும் குழுமத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகம் மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகம் மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் மற்றும் குழுமம் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்

போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன

.

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகம் மற்றும் குழுமத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகம் மற்றும் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்

.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகம் மற்றும் குழுமத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்அ போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகம் மற்றும் குழுமத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் மற்றும் குழுமம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் மற்றும் குழுமம் அவற்றின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததனவா என்பதும், மற்றும்

- பணியகம் மற்றும் குழுமத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | **குறித்த நியமத்துக்கான தொடர்புடன் கூடிய இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) (i) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 – நிதிக்கூற்றுக்கள் | சமர்ப்பிக்கப்பட்ட முற்காலம் ஒன்று அல்லது பல காலங்களுக்கான | நியம பிரகாரம் ஒப்பீட்டு நிதிக்கூற்றுக்களிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கும் நியமத்தின் 40(அ) பந்தி பிரகாரம் நிறுவனமொன்று அதன் நிதிக்கூற்றுக்களை மீண்டும் வெளியிடும் சந்தர்ப்பத்தில் 38 (அ) பந்திக்கு இணங்க தேவையான குறைந்தபட்ச ஒப்பீட்டு ரீதியான நிதிக்கூற்றுக்களிற்கு மேலதிகமாக மூன்றாம் கட்டமாக முற்காலப் பகுதியின் மீள் வெளியீட்டிற்கு முன்னர் நிதிநிலைமை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், பணியகத்தினால் சமர்பிக்கப்பட்ட மீள் வெளியீட்டு நிதிக்கூற்றுக் தொகுதியினுள் முற்காலத்தின் மீள்வெளியீட்டிற்கு முன்னர் நிதிநிலைமை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பீட்டுத் தகவலில் மீது தவரொன்ரின் காலஎல்லை குறித்துரைத்த தாக்கத்தை முடிவு செய்வது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால், கடந்த காலத்திற்கு பாதிக்கும் வகையில் மீள் வெளியிடுவது நடைமுறையாக செய்ய முடியுமான முதல் ஆரம்ப ஆண்டுக்காக ஒதுக்கீடுகள் மற்றும் உரிமைகள் மீதிகளின் ஆரம்ப மீதிகள் மீண்டும் வெளியிடப்பட்டது. | மேலதிகமாக மூன்றாவது கட்டமாக முந்திய காலப் பகுதியில் மீண்டும் வெளியிட முன்னர் நிதி நிலையை சமர்பிக்க வேண்டும். |
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 – நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் நியமத்தின் 32 பந்திக்கு முரணாக பொறியியல் பெறுகை நிர்மாணப் (EPC) பிரிவின் கட்டுபெத்த மற்றும் ஜாவத்த ஆரம்ப அலுவலங்களிற்கு உரியதான செலுத்த வேண்டிய நிறுத்தற் பணத்தினுள் முறையே வரவு மீதி 4120 சந்தர்ப்பங்களில் மற்றும் 74 இனது பெறுமதி ரூபா 5.71 மில்லியன் மற்றும் ரூபா 129.81 மில்லியன் செலவு மீதிகளதிற்கு எதிராக பதிலீடு செய்து செலுத்த வேண்டிய நிறுத்தற் பணத்தின் தேறிய பெறுமானமாக முறையே ரூபா 121.05 மில்லியன் மற்றும் ரூபா 357.33 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான அட்டவணை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க செலுத்த வேண்டிய நிறுத்தற் பணத்திற்கு உரியதாக வரவு மீதிகளை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 - ஆதன பொறிகள் மற்றும் உபகரண நியமத்தின் பத்தி 51 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அதன் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட் காலத்தை மீளாய்வு செய்ய வேண்டியதுடன் அவ் எதிர்பார்க்கப்படும் பெறுமதிகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின் இலங்கை | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் உட்பட அனைத்து சொத்து வகுப்புகளின் பயனுள்ள ஆயுட் காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியை மீள்மதிப்பீடு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இவ் ஆண்டுக்குள் இந்த பயிற்ச்சியை முடிவுறுத்து கணக்குகளிற்கு உட்படுத்த எதிர்பார்கிறோம். | நியமத்திற்கு இணங்க ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட் காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து மதிப்பீட்டு வழுவை சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கியல் நியமம் 08 பிரகாரம் மதிப்பீட்டு வழுயை சரிசெய்ய வேண்டும். எவ்வாறாயினும் பணியகம் மற்றும் துணைக் கம்பனியினால் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பதிவழித்த பெறுமதி முறையே ரூபா 633.07 மில்லியன் மற்றும் ரூபா 558.98 மில்லியன் ஆன சொத்துகள் தொடர்பாக எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட் காலத்தை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், பணியகம் மற்றும் கம்பனியின் முறையே ரூபா 374.79 மில்லியன் மற்றும் ரூபா 523.57 மில்லியனான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்ட வந்த அந்த சொத்துக்களில் மதிப்பீட்டு வழுவை சரிசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 - நிதிக் கருவிகள் நியமத்தின், 5.1.1 பந்தியின் பிரகாரம் ஏதேனுமொரு நிறுவனம் 5.1.3 பந்தியின் விடயப் பரப்பினுள் காட்டப்படும் வர்த்தக பெறவேண்டிய தொகைகளைத் தவிர ஏனைய நிதி ரீதியான சொத்துக்கள் மற்றும் நிதி ரீதியான பொறுப்புகளை கையகப்படுத்த நேர் கிரயத்தை குறைத்த பின்னர் கிடைக்கும் நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப அளவீடு (Initial Measurement) செய்யப்பட வேண்டும். எனினும் பணியகத்தினால் கடன்படுனர்களிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 235.08 மில்லியனைத் தீர்ப்பதற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த பிணைமுறிகளின் நியாயமான பெறுமதிக்கு பதிலாக முகப் பெறுமதியான ரூபா 246.99 மில்லியனை நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருந்தது. | SLFRS - 9 இன் பிரகாரம் பிணைமுறிகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது ஐந்தொகையின் காலக் கழிவு கிரயத்தை பயன்படுத்தியாகும். இந்த விஷேட பிணைமுறிகள் கிடைத்துள்ளது 27/12/2022 திகதியாவதுடன் அதன் முகப் பெறுமதி ரூபா 246,993,200 மற்றும் தீர்வுப் பெறுமதி ரூபா 235,086,152 என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ரூபா 11,907,048 ஆனதுடன் இது கிடைத்த வட்டமாகக் கருதி நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பித்துள்ளதுடன் பிணைமுறி முகப் பெறுமதியில் குறிக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க திறைசேரியிலிருந்து கிடைத்த பிணைமுறிகளின் ஆரம்ப அளவீடு நியாயமான மதிப்பில் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 8 – கணக்கீட்டுக் | நீண்ட காலமாக நிலவிவரும் இனங்காணப்படாத மற்றும் | நியமம் மற்றும் பணியகத்தின் கணக்கீட்டு |

கொள்கைகள், மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் நியமத்தின் - 36 ஆம் பந்தி பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடு மாற்றமொன்றின் தாக்கமானது இலாபம் அல்லது நட்டத்தின் மீதான அக் காலப்பகுதிக்கு மற்றும் எதர்காலத்திற்கு பாதிக்கும் வகையில் செம்மையாக்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டினுள் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 959.08 மில்லியனான வர்த்தக பெறுவனவுகளிற்காக கழிவு நட்டத்திற்காக ஒதுக்கம் ஆண்டின் இலாப நட்ட கணக்கிற்கு செம்மையாக்குவதற்கு பதிலாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் திரண்ட இலாபம்/நட்டத்திற்கு பாதிக்கும் வகையில் முறையே ரூபா 770.62 மில்லியன் மற்றும் ரூபா 188.46 மில்லியன் தொகை இணக்கம் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அத் தொகையால் மிகையாக கணக்கிடப்பட்டு மற்றும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் திரண்ட இலாபங்கள் அத் தொகையால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன. மேலும், இந்த ஒதுக்கீடுகள், 2020 ஆண்டு மற்றும் 2021 ஆண்டிற்காக் வேறுபடுத்தப்பட்டு இனங்கண்ட அடிப்படை எதுவென கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

மாற்றமின்றி நிலவுகின்ற கடன்படுனர் மீதிகளின் பௌதீக நிலைத்திருத்தல் மற்றும சரியான தன்மை தொடர்பாக காணப்படும் பாரிய நிச்சயமற்ற தன்மை மற்றும் இழப்புத் தன்மைக்காக போதிய நிதி ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் வழங்கப்படாமை தொடர்பாக மற்றும் அது கணக்காய்வாளரின் அபிப்பிராயத்திற்கு தாக்கம் செலுத்தியுள்ள விதம் பற்றி பல தடவைகள் கலந்துரையாடப்பட்டு இருந்தன.

அதனால், அதைக் கருத்தில் கொண்டு மீதிகளின் உண்மையான இருப்பு மற்றும் சரியான தன்மையை கண்டறிய 2022.12.31 திகதியன்று நிலுவையாகவுள்ள அனைத்து கடன்படுனர் மற்றும் நிறுத்தல் மீதிகளை மீளாய்வு செய்து கடன்படுனர் மற்றும் நிறுத்தல்களிற்காக ஏற்பாட்டை இனங்காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த நிலுவைகள் 5-10 ஆண்டுகளுக்கும் அதிகமாக நிலுவையாக உள்ளன. ஏற்பாடு எதிர்வு கூறப்பட்டு எம்மால் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது நடைமுறை ஆண்டிற்கு அல்லாது முன்னைய ஆண்டுகளுக்காக ஆகும். ஏற்பாடு முன்னைய ஆண்டிற்குரியதாவதுடன் விஷேடமாக நடைமுறை ஆண்டு அல்லது முன்னைய ஆண்டிற்கு அல்லாததனால் முன்னைய ஆண்டிற்காக பிழைகளை திருத்துவதற்காக சீராக்கம் செய்யப்பட்டது,

அதற்கு மேலதிகமாக, உண்மையான இருப்பு மீதிகள் இல்லாத சில

கொள்கைகளிற்கு இணங்க வர்த்தக பெற வேண்டியவைகளிற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் அத் தொகையை திருப்பிப் பெற முடியாது என்பதற்கு ஏதேனும் விடயம் சார்ந்த சான்றுகள் உள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு முன்கெண்டு செல்லும் பெறுமதிகளை மீளாய்வு செய்து, விரிவான வருமானக் கூற்றில் கழிவு நட்டத்தை அச்சந்தர்ப்பத்தில் இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் நடைமுறை ஆண்டில் முன்னைய ஆண்டுகளுக்கான ஒதுக்கீடுகளை செய்திருப்பது நியமத்திற்கு முரணாகும்.

| | | |
|---|---|---|
| | கடன்படுனர் மற்றும் நிறுத்தல் மீதிகனை நாங்கள் இனங்கண்டோம். அதனால், நாங்கள் நடைமுறை ஆண்டில் அவற்றைச் சரியாக தயாரித்துள்ளோம். | |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் மீதான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டிற்காக பணியகத்தினால் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் கடன்படுனர் மற்றும் நிறுத்தி வைத்தல் மீதிகளில் ரூபா 612.84 மல்லியன் மீளாய்வாண்டு இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டு இருந்ததுடன் அம் மீதியினுள் கடந்த ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யாத ரூபா 380.10 மில்லியனும் உள்ளடங்கியிருந்தது. இப் பதிவழித்தலிற்காக 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2011 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.9 பந்தி பிரகாரம் பணிப்பாளர் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>இப் பதிவழிப்பினுள் அம்பாறை (South East) ஆதார அலுவலகத்தின் கடன்படுனர் மற்றும் நிறுத்தி வைத்தல் மீதிகளில் ரூபா 338 மல்லியன் உள்ளடங்கியிருந்த போதும் குறித்த சேவை வழங்குனர்கள் மற்றும் பதிவழிப்பிற்கான தெளிவான மற்றும் குறிப்பான காரணங்களை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை | 2022.12.31 திகதியன்று உள்ளவாறான அனைத்து நிலுவை கடன்படுனர் மற்றும் நிறுத்தி வைத்தல் மீதிகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 2022 ஆண்டளவில் சரியான கடன்படுனர் மற்றும் நிறுத்தி வைத்தல் நிலுவை மீதிளை இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், ஒரு சில மீதிகள் நீண்ட காலமாக கணக்குகளில் காணப்படுவதாக அறிந்து கொண்டோம், எனினும் அவற்றை வாடிக்கையாளர்களின் பௌதீக ரீதியாக காணப்படும் மீதிகள் அல்லாததுடன் கணக்கு மீதிகள் மாத்திரமாகும். அவ்வாறே, இந்த மீதிகள் நீண்டு காலமாக கடன்படுனர் மற்றும் நிறுத்தி வைத்தல் மீதிகளாக காட்டப்பட்டுள்ளதுடன் அதன் உள்ளவாறான மீதிகள் பிழையானது என அருத்தமாகும். அதனால், இவைகள் அனைத்தையும் கவனத்திற் கொண்டு சரியான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளை காண்பிப்பதற்காக அந்த மீதிகள் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டன. எமது கருத்தின் பிரகாரம் இந்த கணக்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு விடயங்களை சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். மேலும் அந்த நிலுவை மீதிகள் உண்மையானவை அல்லயென மூலாதாரம் மற்றும் சான்றுகள் ஊடாக உறுதி செய்து கொள்ள வேண்டும். |

செம்மையாக்கலிற்காக பணிப்பாளர் சபை / திறைசேரி அங்கீகாரம் அவசியமில்லை.

### 1.5.3 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக துணைக் கம்பனியின் {மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனி} நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் பின்வரும் அவதானிப்புக்களின் அடிப்படையில் என்னால் தெரிவிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஆதார அலுவலகத்திற்கு (Base Office) இடையிலான உள்ளக கொடுக்கல் வாங்கல்களை அகற்ற வேண்டும். அவ்வாறாயினும், அடிப்படை அலுவலகங்களில் பிரிவுகளிற்கு இடையில் மற்றும் அடிப்படை அலுவலகங்களிற்கு இடையில் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 16.46 மில்லியனாக நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் கம்பனியின் ஒவ்வொறு ஆதார அலுவலகங்களினாலும் வாகனங்கள் மற்றும் நிர்மாண உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் உள்ளக ரீதியான ஈட்டியிருந்த சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் வருமானம் ரூபா 113.49 மில்லியன் கம்பனியின் வருடாந்த வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எம்மால் 2022 ஆண்டினுள் உள்ளக-அலகு கொடுக்கல் வாங்கல்களை அகற்ற உள்ளதுடன் தவறிய அளவை எதிர்வரும் ஆண்டில் அகற்ற எதிர்பார்க்கிறோம். அநேகமான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவது உள்ளக-அலகு நடைமுறைக் கணக்கினூடாக ஆகும். அதனால் உள்ளக-அலகு நடைமுறைக் கணக்கை சமப்படுத்தும் போது அநேகமாக கொடுக்கல் வாங்கல்கள் தானாகவே அகன்றுள்ளன. | ஆதார அலுவலகங்களிற்கு இடையில் மற்றும் ஒரே அலுவலகத்தின் பிரிவுகளிற்கு இடையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் வடக்கு ஆதார அலுவலகத்தின் அட்டுறு செலவு காலப் பகுப்பாய்வினுள் ரூபா 11.77 மில்லியன் தொகை BD-624 கருத்திட்டத்தில் பலகை கதவுகள் மற்றும் யன்னல்களை வழங்குவதற்கு மற்றும் பொறுத்துவதற்கு ஒரு துணை ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்ட போதும் அச் செலவுகள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் 2023 ஜுன் 01 திகதி வரையும் இத் தொகை செலுத்தப்படவில்லை. மேலும் கம்பனியின் அனுராதபுர ஆதார அலுவலகத்தின் அடட்டுறு செலவு பதிவேட்டில் ரூபா 3.04 மில்லியன் தொகை நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்ட போதும் அந்த செலவுகள் மற்றும் மீதிகளின் | அறிக்கையிடப்பட்டுள்ள கிரயத்திற்கு வழங்குனர்களிடம் இருந்து பட்டியல்கள் பெறப்படவில்லை. எனினும் துணை ஒப்பந்ததாரர்களின் குறிப்பிடப்பட்டுள்ள அளவைகள், செலவுகள் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுடன் இணங்கியுள்ளன. | அட்டுறு செலவுகளின் சரியான தன்மை மற்றும் இருப்பை உறுதி செய்ய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சரியானதன்மையை உறுதி செய்து கொள்ள ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | கம்பனியின் மற்றும் தாய் கம்பனியான மத்திய பொறியிலாளர் உசாத்துணைப் பணியகத்தின் ஆளணியினரால் கிழக்கு ஆதார அலுவலகத்தில் நலன்புரி சங்கமொன்றை நிறுவியுள்ளதாகவும் அவர்கள் கம்பனியின் இயக்க செயற்பாடுகளிற்காக ஊழியம் மற்றும் பொருட்களை துணை ஒப்பந்த அடிப்படையில் வழங்கி 2019 – 2022 இடையில் 4 ஆண்டு காலப் பகுதியினுள் அதற்காக ரூபா 152.16 மில்லியன் தொகையை கம்பனியினால் செலுத்தியுள்ளதாகவும் உள்ளக கணக்காய்வினால் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. எனினும் இலங்கை கணக்கீட்டு நியமம் 24 பிரகாரம், கம்பனி மற்றும் நலன்புரி சங்கத்திற்கு இடையில் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய, இக் குறிப்பிட்ட தரப்பினர்களின் தொடர்புகளின் தன்மையை போன்றே நிதிககூற்றுக்கள் மீது தொடர்புகளில் ஏற்பட முடியுமான தாக்கம் தொடர்பாக புரிந்து கொள்வதற்காக தேவையான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை மீதிகள் பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. அதனால் இந்த கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படைத் தன்மையுடன் சாதாரண வியாபார நடவடிக்கையாக இடம்பெற்றனவா என்பது தொடர்பாக உள்ள ஆபத்தை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது. | கிழக்கு அலவினால் நிறுவிய நலன்புரி சங்கம் CECB மற்றும் CESL ஆகிய இரண்டு நிறுவனங்களின் அங்கத்தவர்கள் இணைந்து நிறுவியயொன்றாகும். அதன் மூலம் CESL நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டத்திற்குரிய சில வழங்கல்களை மற்றும் பணிகளை மேற்கொண்டுள்ளது.<br><br>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் எடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் நலன்புரி எண்ணக்கருவை இந்த ஆதார அலுவலகத்தில் செயற்படுவதை நிறுத்தியுள்ளது. | தொடர்புடைய தரப்பினர்களிற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்ள வேண்டியதுடன் குறித்த விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கம்பனிக்கு வெளித்தரப்பினரிடம் இருந்து கிடைக்க வேண்டிய வியாபார கடன்படுனர் மீதியான ரூபா 2,395.66 மில்லியன் பெறுமதியிலிருந்து மீளாய்வாண்டிற்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கிடைத்திருந்தது ரூபா 24.59 மில்லியன் ஆகும் அதாவது 01 சதவீதம் மாத்திரமாகும். | கடன்படுனர்களிற்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பியிருந்த போதும் பதில் கிடைப்பதில் தாமதமொன்று காணப்படுகின்றது. | மீதி போதியளவான கடன்படுனர்களிடம் இருந்து மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்ள முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 (iii) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட பணிகள் 90% சதவீதத்தை அடைய முன்னர் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை பூரணமாக தீர்க்க வேண்டிய போதும், கம்பனியின் 06 ஆதார அலுவலகங்களில் | தீர்க்கப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணம் இறுதி பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் தீர்க்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் கருத்திட்ட வேலைகள் 90 சதவீதமாகும் போது முற்பணம் |

| | | | |
|---|---|---|---|
| | பூரணமாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் 90 சதவீதம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண கருத்திட்டங்கள் தொடர்பாக ரூபா 211.13 மில்லியனான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை 2022 திசெம்பர் 31 திகதி தீர்க்காது கணக்குகளில் காணப்பட்டன. மேலும் இந்த மீதிகள் தீர்க்கப்படாமைக்கு காரணம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | | பூரணமாக தீர்க்கப்பட வேண்டும் |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 திகதி கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம் முடிவடைந்த பின்னர் வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய அல்லது வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை இருக்க கூடாது. எனினும் பூர்த்தி செய்யப்பட்ட 62 கருத்திட்டங்களிற்கு உரியதாக தீர்ப்பதற்காக சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரூபா 143.31 மில்லியன் வாடிக்கையாளர்கள் இடமிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் ரூபா 20.6 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. சரியாக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை இந்த வித்தியாசத்திற்கு பிரதானமான காரணமாக இருந்ததாக மேலும் அவதானிக்கப்பட்டது. | இந்த கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் உருவாகியுள்ளது காலா ரீதியான பட்டியல் முறைமையொன்று இல்லாதமை எனும் கருத்தை அகற்ற வேண்டும். இதற்காக அடிப்படையான காரணமாகவுள்ளது ஒப்பந்தப் பெறுமதி பட்டியலிற்கு சமமாக வித்தியாசமாகாததால் ஆகும். அவ்வாறே இறுதிப் பட்டியல்கள் உறுதிப்படுத்தப்படும் வரை ஒப்பந்த பெறுமதியை மாற்ற முடியாததால் அநேகமான மீதிகள் எஞ்சியுள்ளது. இந்த நிலைமைகளை கவனத்திற் கொண்டு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரிசெய்ய எதிர்பார்க்கிறோம். | ஒபந்தப் பெறுமதி மற்றும் உறுதி செய்யப்பட்ட பட்டியல்களின் கூட்டுப் பெறுமதிகளின் வித்தியாசம் சரியாகக் காட்டக் கூடியவாறு தகவல் தொகதியொன்றை பேணிச் செல்ல வேண்டும். அதன் பிரகாரம் கிடைக்க வேண்டிய பெறுமதி குறையும் சந்தர்ப்பங்களில் தேவையான செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும். |
| (எ) | அனைத்து பெறுமதி சேரி வரி (VAT) கொடுப்பனவு கம்பனியின் பிரதான அலுவலகத்தினால் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த பெறமதி சேரி வரி கொடுப்பனவு கணக்கீட்டிற்காக அட்டுறு எண்ணக்கரு பயன்படுத்தப்படும். 2022 திசெம்பர் மாதத்திற்காக ஆதார அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டின் குறிப்பிடப்படும் செலுத்த வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய வெட் வரி மற்றும் அவற்றின் இறுதி நிதிக்கூற்றுக்களிற்கிடையில் ரூபா 12.74 மில்லயனான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டை தீர்ப்பதற்காக கம்பனியினால் மாதாந்த இணக்க செயல்முறையை பேணிச் சென்றிருக்கவில்லை. | VAT வரி, காசு அடிப்படையில் செலுத்துவதற்காக அங்கிகாரம் உள்நாட்டு இறைவரி திணைகளத்திடம் பெறப்பட்டுள்ளது. எனினும் கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யும் தேவைபாட்டினால் அந்த அடிப்படை மீது கணக்கு பேணிச்செல்லப்படுகிறது. இங்கு எந்நேரமும் Claim செய்யப்படாத Input Vat | நியாயமான காலப்பகுதிக்கு ஒரு முறை இணக்கப்பாட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தொகுதியை மேம்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அளவுகள் கணக்குகளில் சேமிக்கப்படும். அந்த அளவிற்காக ERP ஊடாக அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ERP தொகுதியின் மேம்படுத்தல் ஒன்றை கோரியுள்ள போதும் ERP ஊழியர்களின் நிலவும் பற்றாக்குறையினால் இது தாமதித்துள்ளது. கூடிய விரைவில் இது தொடர்பாக அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்கிறோம். | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதி மொத்த கடன்படுனர் மீதி ரூபா 5,296.02 மில்லியனானதுடன் 2023 ஆகஸ்ட் 15 திகதி வரை ரூபா 4.49 மில்லியன் பெறுமதியான 06 கடன்படுனர் உறுதிப்படுத்தல்கள் மாத்திரம் கிடைத்திருந்தன. | கடன்படுனர் மீதயில் 90 சதவீதத்திற்கு அதிகமானவை அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டியுள்ளன. வழக்கமாக உறுதி செய்ய கோரிய போதும், நீங்கள் அறிந்த விதத்தில் பல வருடங்கலாக எமக்கு கிடைக்கும் பதில் மிக பலவீனமானதாகும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கடன்படுனர்களின் இருப்பை மற்றும் சரியான தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம், மொத்த கடன்படுனர் மீதி ரூபா 5,296.02 மில்லியனாவதுடன் அந்த கடன்படுனர்களின் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் பொறியில் பெறுகைகள் நிர்மாணம் (EPC) பிரிவின் மற்றும் மதியுரை பிரிவின் ஆண்டு 3 – 5 இற்கிடையில் கடன்படுனர் மீதி மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதி முறையே ரூபா 641.47 மில்லியன் மற்றும் ரூபா 1,491.12 மில்லியனானது. பணியகத்திற்கு சொந்தமாக கடன் தொகையை உரிய நேரத்திற்கு அறவிடும் சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் இல்லாத | பொறியில் பெறுகைகள் நிர்மாணம் (EPC) பிரிவின் கடன்படுனர் விஷேட ஏற்பாடு ரூபா 1.2 பில்லின் ஆவதுடன் சாதாரண ஏற்பாடு ரூபா 242 மில்லியனாகும். 5 ஆண்டுகளை விஞ்சிய EPC கடன்படுனர் மீதி ரூபா 1,218 மில்லியனாகும். மதியுரை பிரிவின் கடன்படுனர் குறிப்பான ஏற்பாடு ரூபா 180 மில்லியனாவதுடன் சாதாரண ஏற்பாடு ரூபா 26 மில்லியனாகும். அதனால் கருதப்படுவது | நிலுவை கடன்படுனர் மீதிகளை அறவிட சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | வியாபார கடன்படுனர் நியாயமாக சமர்பித்தல் பிரதிபழிப்பதற்கு நிதிக்கூற்றுக்களில் போதிய ஏற்பாடு வழங்கியுள்ளதென. அதற்கு மேலதிகமாக கடன்படுனர் தீர்ப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரமொன்றை பெற்றுக் கொள்ள நீண்ட கால கடன்படுனர் மீதி மற்றும் மொத்த கடன்படுனர் நிலுவை மீதிகள் தொடர்பாக அமைச்சின் கணக்காய்விற்காக கடன்படுனர் அறிக்கை நாம் அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளோம். அவ்வாறே நீண்ட கால நிலுவை மீதிகளை அறவிட தொடர்ச்சியான முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. | |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறியில் பெறுகைகள் நிர்மாணம் (EPC) பிரிவின் ஊவா, பத்தரமுள்ள, மத்திய, கிழக்கு, அம்பாறை மற்றும் தெற்கு ஆதார அலுவலகங்களிற்கு உரியதாக கூட்டுத் தொகை ரூபா 98.15 மில்லியனான செலுத்த வேண்டிய நிறுத்தல் மீதிக்காக விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ரூபா 2.2 பில்லியனான செலுத்த வேண்டிய நிறுத்தல்களில் இருந்து ரூபா 92 மில்லியன் வழங்குனர்களால் இது வரை கோரியில்லாத துணை ஒப்பந்ததாரர்களின் கொடுப்பனவுகளை பிரதிபழிக்கும் சிறிய பெறுமானத்துடன் கூடிய வழங்குனர்களின் நீண்ட பட்டியலுடன் கூடியதாகும். | செலுத்த வேண்டிய நிறுத்தல்கள் மொத்த மீதிகளிற்காக விரிவான தகவல்கள் சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம், மொத்த கடன்கொடுனர் மீதி ரூபா 2,061.60 மில்லியனானதுடன் அந்த கடன்கொடுனர்களின் கால பகுப்பாய்வின் பிரகாரம் பொறியியல் பெறுகைகள் நிர்மாண (EPC) பிரிவின் மற்றும் மதியுரை பிரிவின் 3 - 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன்கொடுனர் மீதி மற்றும் 5 | 5 ஆண்டுகளிற்கும் மேலான மதியுரை கடன்கொடுனர் மீதி ரூபா 361 மில்லியன் ஆவதுடன் 5 ஆண்டுகளிற்கு அதிக EPC கடன்கொடுனர் மீதி ரூபா 1,218 மில்லியனாகும். ரூபா 2 பில்லியன் கடன்கொடுனர்களில், மத்திய பொறியியல் | நீண்டகாலமாக தீர்க்கப்படாத கடன்கொடுனர் மீதியை விரைவில் தீர்க்க பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளை விஞ்சிய கடன்கொடுனர் மீதி முறையே ரூபா 364.90 மில்லியன் மற்றும் ரூபா 670.16 மில்லியனாவதுடன் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | சேவைகள் (தனியார்) கம்பனிக்கு (CESL) செலுத்த வேண்டிய தொகை சுமார் 1.5 பில்லியன் ஆகும். | |

**1.6.3 முறப்பணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பணியகத்தின் நிதி அதிகார ஒப்படைப்பு – 2022 பிரகாரம் பெற்றுக் கொண்ட முற்பணத்தை பணி முடிவடைந்தவுடனே தீர்க்க வேண்டிய போதும், பல நோக்கங்களிற்காக பணியக பொறியில் பெறுகைகள் நிர்மாணம் (EPC) பிரிவிற்கு மற்றும் பிரதான அலுவலக பிரிவிற்கு வழங்கியிருந்த முறையே ரூபா 1.30 மில்லியன் மற்றும் ரூபா 1.66 மில்லியனான முற்பணம் அறிக்கையிடும் திகதி 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறியில் பெறுகைகள் நிர்மாணம் பிரிவின் (EPC) மீதி பிரதானமாக முன் கொண்டு செல்லும் எரிபொருல் வைப்புகளுடன் கூடியதாகும். பிரதான அலுவலகத்தின் மீதிகள் அறவிட தீர்மானமொன்று எடுக்க விபரங்கள் இனங்காணும் செயற்பாட்டில் இன்னும் காண்ப்படுகிறது. | முற்பணம் வழங்கியிருந்த நோக்கங்கள் நிறைவேறியவுடன் அவற்றை தீர்ப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அலுவலர்களினால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நீண்ட கால தாமதம் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பணியகத்தின் கூட்டுத் தொகை ரூபா 2.40 மில்லியன் மீதியுடன் இரண்டு வங்கிக் கணக்குகள் 2022 ஆம் ஆண்டில் கொடுக்கல் வாங்கல்கள் இன்றி செயலற்ற நிலையில் காணப்பட்டன. | **சென்னையில் உள்ள இலங்கை வங்கி கணக்கு - சர்வதேச**<br><br>2023 மே 24 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின்படி, பணியகம் மொரிஷியஸில் சில வேலைகளை செய்திருப்பதாலும், அதற்கு இந்திய வங்கியினால் நிதியளிக்கப்பட்டதாலும் மீதமுள்ள இருப்புடன் வங்கிக் கணக்கைத் தொடர பணிபாளர் சபை உறுதி செய்துள்ளது. | பணியகத்தின் செயலற்ற வங்கிக் கணக்குகள் தொடர்பாக தற்போதைய விவரங்கள் கண்டறிந்து மூடுவதற்கு அல்லது தேவைக்கேற்ப செயல்பாட்டில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | **HSBC கணக்கு - நடுத்தர**<br><br>கணக்கு நீண்ட காலமாக செயல்படாததால் வங்கியால் கணக்கு விவரங்களைக் கண்டறிய முடியவில்லை. அவர்களின் பதில் வரும்வரை காத்திருக்கிறது. | |

**1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 இன் 16 ஆம் இலக்க கொடுப்பனவை புறக்கணித்த வரி தீர்பனவு (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 7 (2) பிரிவின் பிரகாரம் பணியகத்தினால் 1996 முதல் 2007 வரையான காலப்பகுதியில் செலுத்தப்படாத வருமான வரி, வெட் மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி உள்ளடங்களாக ஏனைய வரி மற்றும் உரிய தண்டப்பண கூட்டுத் தொகை ரூபா 82.38 மில்லியன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தத் தவறியிருந்தது. | உள்நாட்டு இறைவரி திணைக்களம் (IRD) இனால் ரூபா 47.12 மில்லியன் தண்டம் இன்றி IT/VAT/PAYE/TT மற்றும் SNC தீர்ப்பதற்காக கடடிமொன்று எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவுத் திட்டத்திற்காக நாங்கள் இன்னும் IRD உடன் கலந்துரையாடி வருவதுடன் அதனை இன்னும் முடிவுறுத்தவில்லை. | நீண்டகாலமாக செலுத்தப்படாதுள்ள வரிகளை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த முகாமைத்துவத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 69,394,967 வரிக்கு முன் இலாபமொன்று காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டில் வரிக்கு முன் இலாபம் ரூபா 48,502,732 காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,892,235 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நானாவித வருமானம் மற்றும் நிதி வருமானம் அதிகரித்தல் இந்த வளர்ச்சிற்கு பிரதான காரணமாகக் இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் பிரதான வருமானம் மற்றும் செலவினம் விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு அல்லது குறைவுகளின் விகிதாசாரத்துடன் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக (மீள் வெளியிடப்பட்ட) | முரண் {சாதகம் / (பாதகம்)} | சதவீதம் % |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **செயற்பாட்டு வருமானம்** | **4,495** | **6,070** | **(1,575)** | **(25.94)** |
| நிர்மாணம் | 2,747 | 3,947 | (1,200) | (30.40) |
| மதியுரைச் சேவை | 1,747 | 2,116 | (369) | (17.44) |
| **விற்பனை கிரயம்** | **(4,038)** | **(5,409)** | **1,371** | **25.34** |
| மொத்த இலாபம் | 457 | 660 | (203) | (30.75) |
| நானாவித வருமானம் | 228 | 116 | 112 | 96.55 |
| நிதி வருமானம் | 381.00 | 175.84 | 205.16 | 116.67 |
| செலவினம் | 997 | 905 | (93) | (10.05) |
| நிர்வாக செலவினம் | 603 | 682 | 79 | 11.54 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் | 390 | 218 | (173) | (79.37) |
| நிதி செலவினம் | 4 | 5 | 1 | 28.43 |
| வரிக்கு முன் இலாபம்/நட்டம் | 69 | 48 | 21 | 43.75 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிர்மாணம் மற்றும் மதியுரைச் சேவை வருமானம் முறையே 30 சதவிதம் மற்றும் 17 சதவீதம் வீழ்ச்சியடைந்தள்ளதுடன் நிதி வருமானம் 117 சதவீதத்தினால் வளர்சியடைந்திருந்தது.

(ஆ) நிர்மாண பணிகளிற்காக துணைக் கம்பனியை நிறுவிய பின்னரும் கூட, பொறியியல் பெறுகைகள் நிர்மாணப் பிரிவை (EPC) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான ரூபா 228 மில்லியன் மற்றும் ரூபா 303 மில்லியன் நட்டம் அடைந்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டிற்கான பணியகத்தின் இன் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2022 | 2021 | 2020 |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| மொத்த இலாப விகிதம் | 10.17 | 10.88 | 8.12 |
| செயற்பாட்டு இலாப விகிதம் | (6.85) | (2.01) | 0.05 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் விகிதம் | 0.39 | 0.27 | 1.34 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 1.2 : 1 | 1.2 : 1 | 1.2 : 1 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 1.2 : 1 | 1.2 : 1 | 1.2 : 1 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டினுள் பணியகத்தினால் அதன் மொத்த சொத்துக்கள் அடிப்படையிலான ரூபா 17,496 மில்லியன் பயன்படுத்தி ரூபா 69 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமொன்றை உழைத்திருந்ததுடன் அது மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் விகிதம் பிரகாரம் 0.39 மாத்திரம் காணப்பட்டது. இதனையொத்த தொழிற்துறையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்துடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைந்த பெறுமானமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணியகத்தினால் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், நிர்மாணக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், பட்டறை பொறிகள் மற்றும் இயந்திரங்கள், கொள்கலன்கள் மற்றும் கணனிகள் போன்றவற்றிற்காக ஒவ்வொரு ஆதார அலுவலகங்களினால் நடாத்தப்படும் சொத்து ஒப்பாய்வின் பிரகாரம் அந்த சொத்துக்களின் உண்மையான இருப்பினை கருத்தில் கொள்ளாமல் பொதுப் பேரேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தது. மேலும், பணியகத்தின் பொதுப் பேரேட்டில் | நிலையான சொத்துக்களின் பௌதீக இருப்பினை உறுதி செய்யும் செயன்முறை இடம்பெற்று வருவதுடன், நிலையான சொத்துப் பதிவேடுகளை ஆய்வு செய்ய மற்றும் ஒப்பாய்வு விபரங்களுடன் நாளாதுவரையாக்க நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு இயலுமான வகையில் நாளாதுவரையாக்கப்பட்ட மையப்படுத்திய நிலையான சொத்துகள் பதிவேடொன்றை பராமரிக்க வேண்டும். |

காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் இருப்பினை உறுதிசெய்வதற்கு பணியகம் மையப்படுத்தப்பட்ட சொத்துப் பதிவேட்டை பராமரித்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கிரயம் ரூபா 648.87 மில்லினான சொத்துக்களின் ரூபா 590.33 மில்லியனான திரண்ட பெறுமானத் தேய்வின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) பொறியியல் பெறுகைகள் நிர்மாணப் (EPC) பிரிவின் அம்பாறை (South East) ஆதார அலுவலகத்தில் 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முழுமையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு கருத்திட்டங்களிகுரியதாக அறவிடப்படாத வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய மீதிகள் காணப்பட முடியாத போதும் ரூபா 13.96 மில்லியன் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய (Due from Customers) மீதிகள் மீளாய்வாண்டு இருதியிலும் அறவிட உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருந்ததுடன் மற்றும் அந்த ஆதார அலுவலகத்தின் இன்னுமொரு கருத்திட்டத்திற்குரியதாக வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய (Due to Customers) ரூபா 1.43 மில்லியன் மீதியும் அவதானிக்கப்பட்டது. மேலும், தெற்கு (Southern) ஆதார அலுவலகத்தில் முழுமையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு கருத்திட்டங்களிகு உரியதாக வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய (Due to Customers) ரூபா 3.89 மில்லியன் மீதியும் அவதானிக்கப்பட்டது.

**வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறவேண்டிய**

01. அம்பாறை (D2011) – அவசர விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் நிர்மாணம் (ரூபா 1,449,885) மற்றும் அம்பாறை (D2128) – மட்டக்களப்பு பிரிவு கல்குடா பொலிஸ் நிலையத்தில் ஆயத்த பெனல்களைப் பயன்படுத்தி உத்தேச பொலிஸ் கட்டிடத்தை நிர்மாணித்தல் (ரூபா 12,458,955) இறுதி பட்டியல்களுடன் ஒப்பந்த தொகை இணங்காத காரணத்தால் இந்த மீதி காணப்படுகிறது.

**வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய**

தெற்கு (D2403) அகுனகொலபலஸ்ஸ உத்தேச பேருந்து நிலைய நிர்மாணக் (ரூபா 3,891,793) கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது 2022 இல் ஆனதுடன் விலகல்கள் அங்கீகரிக்கப்படாததால் இந்த மீதி காணப்படுகிறது.

அம்பாறை (D2234) -

வாடிக்கையாளர்களிட மிருந்து பெறப்பட வேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | மட்டக்களப்பு கலவாஞ்சிக்குடியில் ஒரு பொருளாதார நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிரமாணம் (ரூபா 1,433,624)<br><br>இறுதி பட்டியல் இன்னும் வாடிக்கையாளரால் அங்கீகரிக்கப்படாததால் இந்த மீதி காணப்படுகிறது. | |
| (இ) | பணியகத்திற்கு சொந்தமாக கொழும்பு 07, சரண வீதியில் அமைந்துள்ள 15 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதி அமைந்துள்ள காணி 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பெறுமதி ரூபா 960 மில்லியன் ரூபாவாகவும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 6.68 மில்லியன் ரூபாவாகவும் இருந்தன. இந்த 15 உத்தியோகபூர்வ வீடுகளில் 05 உத்தியோகபூர்வ வீடுகள் பணியகத்தின் அலுவலர்கள் அல்லாத வெளி தரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு வெளி தரப்பினருக்கு உத்தியோகபூர்வ வீடுகளை வழங்குவது காணப்படும் நடைமுறைக்கு முரணாணதென அவதானிக்கப்பட்டது. வெளி தரப்பினருக்கு வழங்கியிருந்த இரண்டு வீடுகளிலிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன் அதற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. அதனால் இந்த உத்தியோகபூர்வ வீடுகள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த பணியகத்தின் கவனம் செலுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | வெளி தரப்பினருக்கு உத்தியோகபூர்வ வீடுகள் வழங்கப்படுவது வரிசை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் ஆகும்.<br><br>தற்போது பணியகத்தின் உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில் 05 உத்தியோகபூர்வ வீடுகள் வெளி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன. | உத்தியோகபூர்வ வீடுகளை குறித்த நோக்கங்களுக்கு அமைய பயன்படுத்த் பணியகம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் DL/10/02/07 - X கொண்ட 2020 ஆகஸ்ட் 21 திகதிய கடிதம் மூலம் மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் வதிவிட முகாமையாளரின் கடிதம் இலக்கம் RPM/RO/L/CLO/PB/38 கொண்ட 2020 நவம்பர் 19 திகதிய கடிதம் மூலம் இலங்கை மகாவலி | இலங்கை மகாவலி அதிகாரசபையின் கடிதத்தின் பிரகாரம் நீண்டகால குத்தகை ஒப்பந்தம் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.<br><br>LKAS 41 இன் பிரகாரம் வளர்ச்சி கட்டத்தில் ஏற்பட்ட அனைத்து செலவினங்களும் நடைமுறையல்லாத | நியமத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் காணியை முறையாக நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள மற்றும் நிதிக்கூற்றுக்களினும் செலவுகள் மற்றும் இருப்புக்களை சரியாக வகைப்படுத்த |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையிற்கு சொந்தமான அம்பாறை மாவட்டத்தின் ரம்பகன்ஓய மகாவலி வலயத்தில் (பொள்ளே பெத்த மகாவலி பிரிவு) 150 ஏக்கர் காணி கலப்பு விவசாய கருத்திட்டத்திற்காக பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணியகத்தினால் விவசாய கருத்திட்டமொன்றை செயல்படுத்தியிருந்த போதும் அந்த காணியை முறையாக நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திகதியான 2023 ஜுன் 01 ஆம் திகதி வரை முறையாக குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாதிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிதிநிக்கூற்றில் இந்த விவசாயத் கருத்திட்டத்தின் மூலம் உருவாகிய உயிரியல் சொத்துக்கள் (Biological Assets) ரூபா 17.27 மில்லியன் உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த பெறுமதியினுள் உயிரியல் அல்லாத சொத்துக்கள் காணி மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 11.26 மில்லியனும், உபகரணங்கள் ரூபா 0.17 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | சொத்துகள் வகையில் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு செல்லப்படுகிறது. தாவரத்தின் வளர்ச்சியுடன் தொடர்புடைய கிரயத்தை வெளிப்படுத்த கருதுவதன் நோக்கம் அவை நேரடி மற்றும் மறைமுக ஊழியம், வழங்கல், ஈடுபடுத்தல் கட்டணம் போன்றதாக. அதனால் ரூபா 11 மில்லியனிற்கு நிலம் தயாரிப்பதற்கான கிரயம் அதாவது இயந்திர உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல், ஊழியம், குழி தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஆகர்கள் போன்றவை உள்ளடங்குகின்றன.<br><br>தற்போது மேற்கொண்டு வரும் பணிகள் (WIP) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் வணிக அறுவடை தொடங்கியவுடன் விற்பனைச் செலவுக்கு மாற்றப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மற்றும் 2022 ஆண்டுகளில், பொறியியல் பெறுகைகள் நிர்மாண (EPC) பிரிவின் செயற்பாட்டு நட்டம் முறையே ரூபா 228.03 மில்லியனில் இருந்து ரூபா 303.11 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33 சதவீத அதிகரிப்பு என அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பொறியியல் பெறுகைகள் நிர்மாண (EPC) பிரிவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதனுள் 14 பிரிவுகளில் 9 பிரிவுகள் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மொத்த செயற்பாட்டு நட்டம் ரூபா 358.91 மில்லியனான அறிக்கையிடப்பட்டு இருந்தது. | காலப் பகுதியினுள் கடன்படுனர் மற்றும் நிறுத்தி வைத்தல்களை பதிவழித்த காரணத்தால் பொறியியல் பெறுகைகள் நிர்மாண (EPC) பிரிவின் ஆதார அலுவலகங்களில் காட்டப்படும் செயற்பாட்டு நட்டத்திற்காக முக்கிய காரணமானது. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட மோடார் வாகனங்கள் மற்றும் பொறிகள் மற்றும் இயந்திரங்களில் இருந்து நிர்வாகச் செலவுகளில் சேர்க்கப்பட்டுள்ள அதிகமான பெறுமானத் தேய்வு நட்டத்திற்காக மேலுமொரு காரணமானது. | முகாமைத்துவத்தினால் ஒப்பந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் செயன்முறை மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் செயன்முறைகளை இனங்காண வேண்டியதுடன் கிடைக்க வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிடுவதனூடாக நட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறே, எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நாட்டின் பொருளாதார பின்னடைவு பணியகத்தின் செயற்பாட்டிற்கு பாதகமாக தாக்கம் செலுத்தியுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதியுரை பிரிவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதியுரை பிரிவின் செலவுகள் 22 மத்திய நிலையங்களில் 17 இற்காக ரூபா 378.60 மில்லியனான மொத்த நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது. | பணியகத்தின் மதியுரை பிரிவில் 20 கிரய மையங்கள் காணப்படுகின்றன. அவர்களிற்கு பல பணிகள் காணப்படுவதுடன் பல்வேறு பணியாளர்கள் உள்ளனர். எனினும் அவர்கள் மொத்த மதியுரை வருமான வெளியீட்டை உருவாக்க ஒற்றுமையாக செயற்படுகின்றனர். அதனால் அவற்றை தனி அலகுகளாகக் கருதி சில அலகுகளில் செயல்பாடு குறைவாக உள்ளதாக குறிப்பிடுவதனை ஏற்க முடியாது. | மதியுரை பிரிவின் செயற்பாட்டு நட்டத்தை குறைத்து செயற்பாட்டு வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர் பொருளாதாரப் பெறுமதியுடைய கொழும்பு டி.பி. ஜயா மாவத்தையில் (டார்லி வீதியில்) அமைந்துள்ள 02 ரூட் 24.5 பர்சஸ் ஆன பணியகத்திற்கு சொந்தமான ரூபா 575 மில்லியன் பெறுமதியான காணி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் எவ்வித ஆக்கபூர்வ பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று நிலவியது. | தற்போது இந்த காணி இலக்கம் 500, டி.பி. ஜயா மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபையின் தலைமை அலுவலக வாகன தரிப்பிடம் வளாகமாக பயன்படுத்தப்படுவதால், இலங்கை மகாவலி அதிகாரசபையின் சொத்தாக பணியகத்தால் பயன்படுத்தப்படும் ஆதனங்களிற்கு (திகன நிலகம் இல் அமைந்துள்ள பணியகத்தினால் பயன்படுத்தப்படும் இலங்கை மகாவலி அதிகாரசபை உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதி) டி.பி. ஜெயா மாவத்தையில் உள்ள சொத்தை பதிலீடு செய்து கொள்வதற்கான | இந்த காணியை ஆக்கபூர்வ பொருளாதார நோக்கங்களுக்காக பயன்படுத்த கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்துக் கொள்கிறோம். | |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 17 திகதிய மற்றும் 08/2019 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நிறுவனங்களின் பெறுகைகள் நடவடிக்கைகளுக்காகவும் அந்த அரசாங்க நிறுவனங்களால மேற்கொள்ளப்படும் வணிக சேவைகளை வழங்குவதற்காகவும் அரசாங்கத்தின் இலத்திரனியல் பெறுகைகள் அமைப்பில் பதிவு செய்ய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி வரையும் பணியகம் அரச இலத்திரனியல் பெறுகைகள் அமைப்பில் பதிவு செய்யப்படவில்லை. | 2023.04.19 திகதிய 08/2019(i) திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 200 மில்லியனிலும் அதிக மதிப்பிடப்பட்ட பெறுகைகள் மாத்திரம் அரச இலத்திரனியல் பெறுகைகள் அமைப்பில் (eGP) பதிவு செய்யப்பட வேண்டும். எமது பெறுகைகள் பெறுமதி எப்போதும் ரூபா 200 மில்லியனுக்கும் குறைவாக இருப்பதால் பணியகத்திற்கு இச் சந்தர்ப்பத்தில் அரச இலத்திரனியல் பெறுகைகள் அமைப்பில் (eGP) பதிவு செய்யத் தேவைப்பாடு இல்லை. | சுற்றறிக்கை இலக்கம் 08/2019 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் பணியகத்தின் பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் வணிக சேவைகளை வழங்குவதற்காகவும் அரசாங்கத்தின் இலத்திரனியல் பெறுகைகள் அமைப்பை பயன்படுத்திக் கொள்ள அங்கு பதிவு செய்யப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 கொண்ட பொது உடமைகளுக்கான வழிகாட்டுதல் - பத்தி 3.3 பிரகாரம் பணியகத்தின அனைத்து நிலை பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு உத்தேச திட்டமொன்று இருக்க வேண்டும். எவ்வாறாயினும் பணியகத்தின் இடைநிலை முகாமைத்துவ மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு உத்தேச திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. | பணியகத்தின் இடைநிலை முகாமைத்துவ மட்டம் (MM-1-1) மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் (HM 1-1, HM 1-3, HM 2-3) இற்கான உத்தேச ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் நீர்ப்பாசன அமைச்சினால் 2022.10.31 திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலளிக்கும் வகையில் முகாமைத்துவ சேவைகள் | சுற்றறிக்கை பிரகாரம் பணியகத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள அனைத்து பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு உத்தேச திட்டமொன்றை அங்கீகரித்துக் கொள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1712/Vol.II இலக்க 2023.02.15 திகதிய கடிதம் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள ஆட்சேர்ப்பு மாதிரி படிவத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக கலந்துரையாட நீர்பாசன அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் 2023.05.25 திகதிய கடிதம் மூலம் கோரியுள்ளது. | ஆலோசனை பிரகாரம் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 13 அலுவலர்களினால் 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான காலத்தினுள் பணியகத்துடன் ரூபா 18.03 மில்லியன் பெறுமதியான பிணைமுறி ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்ததுடன் அவ் அலுவலர்களினால் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 15.21 மில்லியனான ஒப்பந்தங்களை மீறியதால் பணியகத்திற்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. எனினும் 2022 ஆம் ஆண்டில் அந்த நிலுவைத் தொகையை விரைவில் அறவிட பணியகம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | பணிப்பானர் சபையினால் தவணை செலுத்தும் முறை அங்கீகரிக்கப்பட்டுள்து. நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் குறித்த தொகையை தீர்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஊடாக குறித்த உயர் ஸ்தானிகராலயம்/ தூதரகத்திற்கு முகவரிகளை பெற்றுக் கொள்ள உயர் ஸ்தானிகராலயம் / தூதரகத்திற்கு உதவியைக் கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. | பிணைமுறியை மீறிய அலுவலர்களிடமிருந்து பணியகத்திற்கு அறவிட வேண்டிய நிலுவைத் தொகையை பிணையதாரர்களிடமிருந்து அறவிட அல்லது ஒப்பந்தத்தின்படி சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பணியகத்திற்கு சொந்தமான துணைக் கம்பனியின் அனுராதபுர இயக்க அலுவலகத்தில் 2016 சனவரி 01 முதல் 2020 ஜூன் 22 வரை நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகளைக் கருத்தில் கொண்டு அதன் போது பிரதான இயக்க பொறியியலாளராக கடமையாற்றிய அலுவலர் 2021 சனவரி 11 திகதியிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். அவ்வாறாயினும், இது தொடர்பான விசாரணையை முடிவுறுத்தாது தலைவரினால் 2021 மே 24 திகதிய கடிதத்தின் மூலம் சம்பந்தப்பட்ட அலுவலரை பதவிநீக்கம் செய்யப்பட்ட திகதியான 2021 சனவரி 11 தித்தியிலிருந்தே அவரை இந்தப் பணியகத்தின் பணியாளராக மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். | இந்த விசாரணைகள் இது வரை நிறைவு பெறாததுடன் தலைவரினால் 2021.05.24 திகதிய கடிதத்தின் மூலம் விசாரணைகள் தாமதமாவதால் 2021.01.11 திகதி முதல் அமுலாகும் வகையில் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். | சுதந்திரமான விசாரணை ஒன்றை நடாத்தி அதன் பிரகாரம் பொறுத்தமான செயற்பாட்டை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 கொண்ட பொது உடமைகளுக்கான வழிகாட்டுதல் - பத்தி 6.6 பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் ஆண்டறிக்கை 2023 மே 30 வரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆண்டு அறிக்கை 2023.06.26 திகதி அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சதிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 கொண்ட பொது உடமைகளுக்கான வழிகாட்டுதல் - பத்தி - 2.3 பிரகாரம் தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் தமது நோக்கங்களை அடைந்து கொள்ள தேவையான மூலோபாயத் திட்டமொன்றை தயாரித்துள்ளதாக பணிப்பாளர் சபை உறுதி செய்ய வேண்டிய போதும் 2022 - 2026 ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2022 ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தை திருத்தங்களுடன் தயாரிக்கப்படவில்லை. | 2022 - 2026 ஆண்டுகளிற்கான மூலோபாயத் திட்டத்தை தற்போது 75 சதவீதம் நிறைவு செய்துள்ளதுடன் அதனை கூடிய விரைவில் சபைக்கு வழங்க திட்டமிட்டுள்ளோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |